இயல் இரண்டு

கவிதைப்பேழை

# பராபரக் கண்ணி




அற இலக்கியங்கள் நம் முன்னோர்களின் வாழ்க்கை அனுபவங்களை உள்ளடக்கியவை. அவை வாழ்வியல் நெறிகளையும் ஒழுக்கங்களையும் விளக்குபவை. நம் தமிழ் இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் நெறிகள் உலகம் முழுமைக்கும் பொதுவானவை. அற இலக்கியங்கள் கூறும் கருத்துகளைக் கடைப்பிடித்து வாழ்வதே சிறந்த வாழ்வு. அவற்றை நாமும் பின்பற்றுவோம்; வாழ்வை வளமாக்குவோம்.

L6INXS

1. *தம்உயிர்போல் எவ்வுயிரும் தானென்று தண்டருள்கூர்*
*செம்மையருக்கு ஏவல்என்று செய்வேன் பராபரமே!**

### சொல்லும் பொருளும்

தண்டருள் - குளிர்ந்த கருணை
கூர் - மிகுதி
செம்மையருக்கு - சான்றோருக்கு
ஏவல் - தொண்டு
பராபரமே - மேலான பொருளே

### பாடலின் பொருள்

அனைத்து உயிர்களையும் தம் உயிர்போல் கருதும் கருணை மிகுந்த சான்றோர்க்குத் தொண்டு செய்ய வேண்டும்.

2. *அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்*
*இன்பநிலை தானேவந்து எய்தும் பராபரமே!*

### சொல்லும் பொருளும்

பணி - தொண்டு
எய்தும் - கிடைக்கும்

### பாடலின் பொருள்

அன்பர்களுக்குத் தொண்டு செய்பவராக என்னை ஆக்கிவிட்டால் போதும். இன்பநிலை தானே வந்து சேரும்.

3. *எல்லாரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே*
*அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே!**

### சொல்லும் பொருளும்

எல்லாரும் - எல்லா மக்களும்
அல்லாமல் - அதைத்தவிர

### பாடலின் பொருள்

எல்லாரும் இன்பமாக வாழ வேண்டும். அதைத்தவிர, வேறு எதையும் நினைக்க மாட்டேன்.



Scanned by CamScanner

### நூல் வெளி



இப்பாடலை எழுதியவர் **தாயுமானவர்**. திருச்சியை ஆண்ட விசயரகுநாத சொக்கலிங்கரிடம் தலைமைக் கணக்கராகப் பணி புரிந்தவர்.

இப்பகுதி **தாயுமானவர் பாடல்கள்** என்னும் நூலில் உள்ளது. இந்நூலைத் **தமிழ் மொழியின் உபநிடதம்** எனப் போற்றுவர். இப்பாடல்கள் 'பராபரக் கண்ணி' என்னும் தலைப்பில் உள்ளன. 'கண்ணி' என்பது இரண்டு அடிகளில் பாடப்படும் பாடல்வகை.

## கற்பவை கற்றபின்

1. உங்கள் வீட்டில் வளர்க்கும் உயிரினங்கள் பற்றிக் கூறுக.
2. நீங்கள் பிறர் மகிழும்படி செய்த நிகழ்வுகளைக் கூறுக.

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

1. தம் + உயிர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ---------
   அ) தம்முயிர் ஆ) தமதுயிர் இ) தம்உயிர் ஈ) தம்முஉயிர்
2. இன்புற்று + இருக்க என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் --------
   அ) இன்புற்றிருக்க ஆ)இன்புறுறிருக்க இ) இன்புற்றுஇருக்க ஈ) இன்புறு இருக்க
3. தானென்று என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது --------
   அ) தானெ + என்று ஆ)தான் + என்று இ) தா + னென்று ஈ) தான் + னென்று
4. சோம்பல் என்னும் சொல்லுக்குரிய பொருத்தமான எதிர்ச்சொல் ----------
   அ) அழிவு ஆ) துன்பம் இ) சுறுசுறுப்பு ஈ) சோகம்

**நயம் அறிக**

பராபரக்கண்ணி பாடலில் இடம் பெற்றுள்ள எதுகை, மோனைச் சொற்களை எடுத்து எழுதுக.

**குறுவினா**

1. யாருக்குத் தொண்டு செய்ய வேண்டும்?
2. இன்பநிலை எப்போது வந்து சேரும்?

**சிறுவினா**

பராபரக்கண்ணியில் தாயுமானவர் கூறுவன யாவை?

**சிந்தனைவினா**

குளிரால் வாடுபவர்களுக்கு நீங்கள் எவ்விதம் உதவுவீர்கள்?

L6SJZF



Scanned by CamScanner

www.tntextbooks.in



## வாழ்த்து

முத்தே பவளமே மொய்த்தபசும் பொற்சுடரே
சித்தேஎன் னுள்ளத் தெளிவே பராபரமே
கண்ணே கருத்தேயென் கற்பகமே கண்ணிறைந்த
விண்ணே ஆனந்த வியப்பே பராபரமே. *

– தாயுமானவர்



**பொருள் :** மேலான பரம்பொருளே! நீ முத்தாகவும் பவளமாகவும் பொன்னொளியாகவும் பேரறிவாகவும் என் உள்ளத் தெளிவாகவும் இருக்கின்றாய். கண்ணாகவும் என் கருத்தாகவும் கேட்டவற்றை எல்லாம் வழங்கும் கற்பக மரமாகவும் கண்ணுள் நிறைந்த விண்ணாகவும் மகிழ்ச்சியில் தோன்றும் வியப்பாகவும் காட்சியளிக்கின்றாய். உன் அருள் வேண்டி நிற்கின்றேன், அருள்வாயாக.

**சொற்பொருள் :** சுடர்–ஒளி; ஆனந்தம் – மகிழ்ச்சி; பராபரம் – மேலான பொருள், இறைவன்.

### ஆசிரியர் குறிப்பு

| | | |
|---|---|---|
| பெயர் | : | தாயுமானவர். |
| பெற்றோர் | : | கேடிலியப்பர் – கெசவல்லி அம்மையார். |
| மனைவி | : | மட்டுவார்குழலி. |
| ஊர் | : | நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள திருமறைக்காடு (வேதாரண்யம்). |
| நூல் | : | தாயுமானவர் திருப்பாடல் திரட்டு. |
| பணி | : | திருச்சியை ஆண்ட விசய ரகுநாத சொக்கலிங்கரிடம் கருவூலஅலுவலர். |
| காலம் | : | கி. பி. பதினெட்டாம் நூற்றாண்டு. |

**நூல் குறிப்பு :** வாழ்த்தாக இடம்பெற்றுள்ள பாடல், தாயுமானவர் திருப்பாடல் திரட்டு என்னும் நூலில் பராபரக்கண்ணி என்னும் தலைப்பில் இடம்பெற்றுள்ளது. இந்நூல், தெய்வத் தமிழின் இனிமையும் எளிமையும் பொருந்திய செய்யுள் நடையால் ஆனது; கற்பார்க்கு மனத்தூய்மை, பத்திச்சுவை ஆகியனவற்றை ஊட்டும்.

திருச்சிராப்பள்ளி மலைமீது எழுந்தருளியுள்ள இறைவனான தாயுமானவரின் திருவருளால் பிறந்தமையால், இவருக்குத் தாயுமானவர் என்று பெயர் சூட்டப்பட்டது. தாயுமானவர் நினைவு இல்லம் இராமநாதபுரம் மாவட்டத்து இலட்சுமிபுரத்தில் உள்ளது.

* மனப்பாடப் பகுதி



Scanned by CamScanner